12

Reg. No. 12503

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையை தேர்வு செய்யவும். 20 x 1 = 20

1. கடனாளிகள் தொடக்க இருப்பு ₹30,000, பெற்ற ரொக்கம் 1,00,000, கடன் விற்பனை 90,000, கடனாளிகள் இறுதி இருப்பு?
அ) ₹30000 ஆ) ₹130000 இ) ₹40000 ஈ) ₹20000
2. பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள் அ) நட்டம் ஆ) ரொக்கம் இ) முதல் ஈ) இலாபம்
3. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய பொறுப்பு
4. உயில்கொடை ஒரு அ) வருவாயினச் செலவு ஆ) முதலினச் செலவு இ) வருவாயினச் செலவு ஈ) முதலின வரவு
5. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால் அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932– ன் படி வழங்கப்படும் வட்டி வீதம் அ) ஆண்டுக்கு 8 ஆ) ஆண்டுக்கு 12 இ) ஆண்டுக்கு 5 ஈ) ஆண்டுக்கு 6
6. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன்மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி
7. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்.
அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்
8. சராசரி இலாபம் ₹25000 மற்றும் சாதாரண இலாபம் ₹15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
அ) ₹25000 ஆ) ₹5000 இ) ₹10000 ஈ) ₹15000
9. கூட்டாளி சேர்ப்பின்போது புதிய கூட்டாளி நற்பெயருக்காக கொண்டு வரும் தொகை, யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்? அ) அனைத்து கூட்டாளிகள் ஆ) பழைய கூட்டாளிகள் இ) புதிய கூட்டாளி ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்
10. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.
அ) மறுமதிப்பீட்டு இலாபம் ஆ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் இ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் ஈ) முதலீட்டு மாறுபடும் நிதி
11. மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
12. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4 : 2 : 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
அ) 4 : 3 ஆ) 3 : 4 இ) 2 : 1 ஈ) 1 : 2
13. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை
14. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு
15. நிதிநிலை அறிக்கைகள் வெளியிக்காட்டாது அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள் இ) குறுகிய கால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்
16. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
அ) நடப்புப் பொறுப்புகள் ஆ) நடைமுறை முதல் இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்டகாலச் சொத்துகள்
17. புற அக பொறுப்புகள் அளவிடுவது
அ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன் இ) இலாபம் ஈட்டும் திறன் ஈ) செயல்திறன்
18. நடப்புப் பொறுப்பு ₹40000 : நடப்புச் சொத்து ₹100000 ; சரக்கிருப்பு ₹20000 எனில் விரைவு விகிதம்
அ) 1 : 1 ஆ) 2.5 : 1 இ) 2 : 1 ஈ) 1 : 2
19. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது? அ) தலைமைப் பதிவு ஆ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம் இ) அறிக்கைகள் ஈ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது
20. சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ்வரும்?
அ) நேரடி வருமானங்கள் ஆ) நேரடி செலவினங்கள் இ) மறைமுக வருமானங்கள் ஈ) மறைமுக செலவினங்கள்

II. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. (30 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்) 7 x 2 = 14

21. நிலை அறிக்கை என்றால் என்ன?
22. உயில்கொடை என்றால் என்ன?
23. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?
24. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
25. Tally ERP 9 –ல் குழு என்றால் என்ன?
26. பின்வரும் தகவல்களிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய முதல் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 |
| உரிமையாளர் தனது சொந்த பயனுக்காக சரக்கு எடுத்தது | 30,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 15,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 60,000 |

1,45,000



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

27. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும். 2016 ₹8000 ; 2017 : ₹10000 ; 2018 ₹9000
28. பிரவீனா மற்றும் தான்யா என்ற இரு கூட்டாளிகள் 7 : 3 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் மாலினி என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பிரவீனா, தான்யா மற்றும் மாலினி அவர்களின் புதிய இலாப விகிதம் 5 : 2 : 3 தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.
29. கயல் மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். இலாபப் பகிர்வு விகிதம் 3 : 2 ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.
30. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.
மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹240000 மொத்த நடப்புச் சொத்துகள் ₹450000 சரக்கிருப்பு ₹70000 : முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ₹20000

III. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. (40 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்) 7 x 3 = 21

31. முழுமைபெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை?
32. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.
33. Tally.ERP 9 ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளை குறிப்பிடவும்.
34. இலாப நோக்கற்ற அமைப்பின் இறுதிக் கணக்குகளில் ஆண்டுச் சந்தா எவ்வாறு கையாளப்படுகிறது?
35. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு :
2014 ₹10000 ; 2015 ₹11,000 : 2016 ₹12000 ; 2017 ₹13000 மற்றும் 2018 ₹14000 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரைக் கணக்கிடவும். 24,000
36. மாலா மற்றும் அனிதா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். மொர்சி என்பவர் 1/5 இலாப விகிதத்தில் கூட்டாண்மையில் கூட்டாளியாக சேருகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.
37. வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்படவேண்டும்.
i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை ₹18000 அதிகரிக்கவேண்டும். ii) இயந்திரத்தின் மதிப்பை ₹15000 குறைக்க வேண்டும்.
iii) கொடுபட வேண்டியச் செலவுகளுக்கு ₹8000 ஒதுக்கு உருவாக்க வேண்டும். குறிப்பேட்டு பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.
38. அப்துல் வரையறு நிறுமம் ₹10 மதிப்புள்ள 50000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. அனைத்துத் தொகையும் விண்ணப்பத்துடன் செலுத்துமாறு பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால் ii) பங்கொன்று ₹2 முனைமத்தில் வெளியிட்டால்
39. டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2015 – 16 ₹ | 2016 – 17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40000 | 50000 |
| இயக்கச் செலவுகள் | 25000 | 27500 |
| வருமான வரி % (வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில்) | 30% | 30% |

40. கீதா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதத்தைக் கணக்கிடவும்.
i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹55,00,000
ii) அவ்வாண்டின் இறுதியில் நிலைச் சொத்துகள் ₹5,00,000.

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளி. 7 x 5 = 35

41. அ) செல்வம் என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 1-1-2018 ₹ | 31-12-2018 ₹ |
|---|---|---|
| இயந்திரம் | 60,000 | 60,000 |
| வங்கி ரொக்கம் | 25,000 | 33,000 |
| பற்பல கடனாளிகள் | 70,000 | 1,00,000 |
| சரக்கிருப்பு | 45,000 | 22,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 | 38,000 |
| வங்கிக் கடன் | 45,000 | 45,000 |
| பற்பல கடனீந்தோர் | 25,000 | 21,000 |

| | ₹ | | ₹ |
|---|---|---|---|
| ரொக்கவிற்பனை | 20,000 | கடன் விற்பனை | 1,80,000 |
| ரொக்கக் கொள்முதல் | 8,000 | கடன் கொள்முதல் | 52,000 |
| கூலி | 6,000 | சம்பளம் | 23,500 |
| விளம்பரம் | 7,000 | வங்கிக் கடன் மீது வட்டி | 4,500 |
| எடுப்புகள் | 60,000 | கூடுதல் முதல் | 21,000 |

சரிக்கட்டுதல்கள் :
இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும். கடனாளிகள் மீது 1% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும். (அல்லது)



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 | கொள்முதல் திருப்பம் | 15,000 |
| 2018 ஜனவரி 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 | ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 | 31–12–2018 அன்று கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்குச் செலுத்தியது | 30,000 | 31–12–2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |

42. அ) கீழ்க்காணும் தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் (ம) செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு கைரொக்கம் | 14,000 | சம்பளம் | 20,000 |
| வட்டிப் பெற்றது | 5,000 | வாடகை | 24,000 |
| சந்தா | 55,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| உயில்கொடை | 48,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 6,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| அறைகலன் விற்றது (ஏட்டு மதிப்பு ₹17,000) | 16,000 | விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 33,000 |
| | | இருப்பு கீ/இ கைரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

**(அல்லது)**

ஆ) ஆனந்த் மற்றும் நாராயணன் இருவரும் கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 5 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ₹50,000 மற்றும் ₹30000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது.

அ) முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

ஆ) ஆனந்த் மற்றும் நாராயணனுக்கு விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ₹1000 மற்றும் ₹ 800.

இ) முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீதான வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ₹35,000

கூட்டாளிகளுடைய முதல், மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும் மற்றும் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இலாப நட்டப் பகிர்வு கணக்கையும் தயார் செய்யவும்.

43. அ) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வட்டி மற்றும் வங்கிக் கட்டணம் | 250 |
| வங்கி மேல்வரைப் பற்று இருப்பு (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதானம் பராமரிப்பு | 550 |
| பயணச் செலவுகள் | 1,800 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது | 2,800 |
| பொதுச் செலவுகள் | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 1,00,000 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| தாது அஞ்சல் செலவுகள் | 2,000 | மின்கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக்க இருப்பு (31.3.2019) | 1,750 |

**(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.

அ) சராசரி இலாபம் ₹20,000 ஆ) சாதாரண இலாப விகிதம் 10% இ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹1,50,000

44. அ) இலாப நட்டங்களை நமமாகப் பகிர்ந்துகொள்ளும் ஜேம்ஸ் மற்றும் ஜஸ்டினாவின் 1.1.2017 ம் நாளன்றைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டடம் | 70,000 |
| ஜேம்ஸ் | 40,000 | | சரக்கிருப்பு | 30,000 |
| ஜஸ்டினா | 50,000 | | கடனாளிகள் | 20,000 |
| | | 90000 | வங்கி ரொக்கம் | 15,000 |
| கடனீந்தோர் | | 35,000 | முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு | 5,000 |
| காப்பு நிதி | | 15,000 | | |
| | | 1,40,000 | | 1,40,000 |

மேற்கூறிய நாளில் பாலன் என்பவரை எதிர்கால இலாபத்தில் 1/5 பங்கிற்கு பின்வரும் விவரங்கள் அடிப்படையில் கூட்டாளியாக சேர்த்தனர்.

1) பாலன் 25000 முதல் கொண்டுவந்தார். 2) நற்பெயரில் அவருடைய பங்காக 10000 ரொக்கமாக கொண்டு வந்தார்.

3) சொத்துகள் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டன. கட்டடம் ₹80,000 : கடனாளிகள் ₹18,000 சரக்கிருப்பு ₹33,000

தேவையான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்து கூட்டாளி சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

**(அல்லது)**

ஆ) நதியா, ஜவுளி வரையறு நிறுமம் ₹10 மதிப்பிலான ₹8 அழைக்கப்பட்ட 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இதில் மயூரி பங்கு ஒன்றுக்கு ₹6 விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டிற்கான தொகையினைச் செலுத்தி இருந்தார். அவற்றில் 75 பங்குகள் பங்கு ஒன்றுக்கு ₹7 பெற்றுக் கொண்டு ₹8 வீதம் செலுத்தப்பட்ட பங்குகளாக சௌந்தர்யா என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

45. அ) வர்ஷா, சாந்தி மற்றும் மாதுரி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 5 : 4 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2017, டிசம்பர் 31 அன்றைய அவர்களுடைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | வளாகம் | 1,20,000 |
| வர்ஷா – | 80,000 | | சரக்கிருப்பு | 40,000 |
| சாந்தி – | 60,000 | | கடனாளிகள் | 50,000 |
| மாதுரி – | 20,000 | | வங்கி ரொக்கம் | 18,000 |
| | | 1,60,000 | இலாப நட்டக் க/கு | 12,000 |
| பொதுக்காப்பு | | 48,000 | (நட்டம்) | |
| பற்பல கடனீந்தோர் | | 32,000 | | |
| | | 2,40,000 | | 2,40,000 |

1-1-2018 அன்று மாதுரி இறந்துவிட்டார். அவரின் இறப்பின் போது பின்வரும் ஏற்படுகள் செய்யப்பட்டன.
1) சரக்கிருப்பின் மதிப்பில் குறைக்கப்பட வேண்டும் 2) வளாகம் மீது 20% மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.
3) வாராக்கடன் ஒதுக்கு ₹4,000 உருவாக்க வேண்டும் 4) மாதுரிக்குச் செலுத்தவேண்டியத் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுவனத்தின் மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும். **(அல்லது)**

ஆ) அர்ஜூன் நிறுமத்திடமிருந்து பெறப்பட்ட பின்வரும் தகவல்களிலிருந்து, கணக்குகள் மூலம் செலுத்தவேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் சராசரி கடன் செலுத்தும் காலத்தையும் (நாட்களில்) கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018–2019 ல் கடன் கொள்முதல் | 9,50,000 | 1-4-2018 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 45,000 |
| 1-4-2018 அன்று வணிக கடனீந்தோர் | 60,000 | 31-3-2019 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 35,000 |
| 31-3-2019 அன்று வணிக கடனீந்தோர் | 50,000 | | |

46. அ) கஸ்தூரி வரையறு நிறுமம் ₹10 மதிப்புள்ள 20000 நேர்மைப் பங்குகளை ₹2 முனைமத்தில் வெளியிட்டது. 30000 பங்குகளுக்கான விண்ணப்பதாரர்களுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது. ₹3 விண்ணப்பத்தின் மீதும், ₹5 ஒதுக்கீட்டின் மீதும் (முனைமம் ₹2 உள்பட) ₹2 முதல் அழைப்பின் மீதும் மற்றும் ₹2 இறுதி அழைப்பின் மீதும் செலுத்தப்படவேண்டும். சுபின் என்றும் பங்குதாரர் தன்னுடைய 500 பங்குகளுக்கான முதலாவது மற்றும் இறுதி அழைப்பிற்கான தொகையினை கட்டத் தவறினார். அவரது பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அதில், 400 பங்குகள் ஒன்று ₹8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். **(அல்லது)**

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து, கவிதா நிறுமத்தின் போக்கு சதவீதங்களை கணக்கிடவும்

| விவரம் | ₹ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வரவாய் | 300 | 270 | 150 |
| இதர வருமானம் | 50 | 80 | 60 |
| செலவுகள் | 250 | 200 | 125 |
| வருமானவரி% | 40 | 40 | 40 |

47. அ) ரொவினா நிறுமத்தின் பின்வரும் வியாபார நடவடிக்கைகளிலிருந்து (1) மொத்த இலாப விகிதம் (2) நிகர இலாப விகிதம் (3) இயக்க அடக்கவிலை விகிதம் (4) இயக்க இலாப விகிதம்

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | ₹ |
|---|---|
| I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 4,00,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருமானம் | 4,000 |
| III. மொத்த வருவாய் (I + II) | 4,04,000 |
| IV. செலவுகள் | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 2,10,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 30,000 |
| நிதிசார் செலவுகள் | 24,000 |
| இதர செலவுகள் (நிர்வாக மற்றும் விற்பனை) | 60,000 |
| மொத்தச் செலவுகள் | 3,24,000 |
| V. வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III – IV) | 80,000 |

**(அல்லது)**

ஆ) கணினிமயக் கணக்கியில் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com
CamScanner